மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

அ.வ.எண். 224/2022

வா.சா.1

தேதி : 11.10.2023

பெயர் : மணி என்ற முருகையா த/பெ :

வயது : தொழில் :

கிராமம்: மாவட்டம்:

1873 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10 வது பிரிவின் படி 2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1 ம் சாட்சியாக இன்று சாட்சியம் அளிக்கிறேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன்.

கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 20.02.1981 ம் தேதியிட்ட எனக்கு வழக்குரை 2 வது தபசில் சொத்தை பொறுத்து தங்கவேல், சுப்பையா ஆகிய இருவரும் எழுதிக்கொடுத்த பதிவு கிரைய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக கணினி வழி பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.1**

2. வழக்குரை 2 வது தபசில் புல எண்ணிற்குரிய பட்டா கணினி வழி பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.2**

3. வழக்குரை 2 வது தபசில் புல எண்ணிற்குரிய புல வரைபடம் கணினி வழி பதிவிறக்க நகல் எண்ணம் –2 – **வா.சா.ஆ.3**

4. 22.10.2022 ம் தேதியிட்ட பதிவிறக்கம் செய்யப்பட்ட வழக்குரை 2 வது தபசில் சொத்திற்குரிய வில்லங்கசான்றிதழ் – **வா.சா.ஆ.4**

**5.** 21.02.1981 ம் தேதியிட்ட எனது சகோதரர் சுடலைமணிக்கு வழக்குரை 3 வது தபசில் சொத்தை பொறுத்து தங்கவேல், சுப்பையா ஆகிய இருவரும் எழுதிக்கொடுத்த பதிவு கிரைய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக கணினி வழி பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.5**

**6.** 20.02.1981 ம் தேதியிட்ட எனது பெரியம்மா மகன் சுப்பிரமணியனுக்கு தங்கவேல், சுப்பையா ஆகிய இருவரும் எழுதிக்கொடுத்த பதிவு கிரைய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக கணினி வழி பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.6**

7. 25.09.2020 ம் தேதியில் 1, 2 பிரதிவாரிகள் , ஜெயந்தி ஆகிய மூவரும் வழக்குரை 3 வது தபசில் சொத்தைப்பொறுத்து ராஜேந்திரனுக்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரைய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக கணினி வழி பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.7**

8. 06.05.2022 ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகள் வழக்குரை 2 வது தபசில் சொத்தை பொறுத்து 3 வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரைய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக கணினி வழி பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.8**

**பிராதுப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது. )

ஒ/ம்–சா.முத்துலெட்சுமி, பி.ஏ. எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஸ்ரீவைகுண்டம்.